20th December 1954]

Acquisition of Harijan cheris on private lands in Coimbatore.

* 454 *Q.*—Sri P. G. MANICKAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state with reference to the answer given to Question No. 625 on 10th May 1954, the action since taken by the Government to buy or acquire the private lands on which there are 179 Harijan cheris?

The Hon. Sri B. PARAMESWARAN :—" Awards for acquisition of house-sites in two villages in Coimbatore district have been passed. Proposals for acquisition of six Harijan cheris situated on private lands have been taken up by the Collector of Coimbatore. The Collector is investigating the necessity for acquisition of Harijan cheris in Bhavani and Thiruppur taluks. After completing the work in these taluks the Collector will examine the need for acquisition in other taluks."

Sri P. G. MANICKAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, கோயம்பத்தூர் ஜில்லாவில் இருக்கும் ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டு வாங்கிக் கொடுக்க சர்க்காரால் ஒதுக்கப்படும் பணத்தில் பெரும் பாகம் செலவிடப்படாமலேயே ஒவ்வொரு வருஷமும் சர்க்காருக்கே திரும்பி போய்விடுகிறது. குறிப்பாக எனது **unstarred** கேள்வி நெ. **19**-க்கு சர்க்கார் கொடுத்திருக்கும் பதிலைப் பார்த்தால் நான் சொல்வதன் உண்மை தெரியும். **1952–53**-ம் வருஷத்தில் ஒதுக்கப்பட்ட பணம் ரூ. **55,900** என்றால் செலவிடப்பட்டது ரூ. **51,989**. ஆகவே பாக்கி **3,911** ரூபாய் சர்க்காருக்கே போய்விட்டது. அதேபோல **1953–54**-ம் வருஷத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. **23,100**. ஆனால் **11,150** ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது. பாக்கி ரூ. **11,950** சர்க்காருக்கே திருப்பி விடப்பட்டிருக்கிறது. **1954–55**-ம் வருஷத்திற்கு ரூ. **29,000** ஒதுக்கப் பட்டிருக்கிறதே தவிர செலவிடப்பட்டிருக்கும் தொகை ரூ. **3,960**-தான். மீதி இன்னும் செலவழிக்கப்படவில்லை. ஆனால் இந்த ஜில்லாவிலே **179** சேரிகளிலுள்ள ஹரிஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மனைக்கட்டுகள் இல்லாமல் அடிமை வாழ்வில் தவித்துக் கொண்டிருக்கிறார் கள். ஆகையால் மீதியிருக்கும் பணம் இவ்வாண்டும் காலாவதி ஆகிவிடாமல் அவர்களுக்கெல்லாம் மனைக் கட்டுகள் வாங்கிக் கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?"

The Hon. Sri B. PARAMESWARAN :—" Sir, land acquisition process is a cumbersome one. We have to go through various stages and special instructions have been issued to the Collectors to expedite action in this matter. If a few thousands of rupees are surrendered, it is not because of want of sincerity or earnestness on the part of the Government to push through the scheme, but it is merely because the sites selected were not suitable for Harijans and due to various other causes also."

Sri S. R. ARUMUGHAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, மேஜர் பஞ்சாயத்துக்களிலும், முனிசிபாலிட்டிகளிலும் இருக்கக்கூடிய காலிமனைக் கட்டுக்களைக் கோரி ஹரிஜனங்கள் விண்ணப்பம் போட்டால் அந்த மனைக் கட்டுகளை அவர்களுக்கு மார்க்கெட் **value**-க்குக் கொடுக்கவேண்டுமென்று சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டத்தின் படி ஹரிஜனங்களில் யாரும் மார்க்கெட் **value** கொடுத்து அந்தக் காலி மனைக்கட்டுக்களை வாங்க முன்வருவதாகத் தெரியவில்லை. ஆகையால் சர்க்கார் அந்தச் சட்டத்தை மாற்றி மேஜர் பஞ்சாயத்து, முனிஸிபாலிட்டிகளிலுள்ள பூமிகளையும் மற்ற இடங்களிலுள்ள பூமிகளைப் போலவே கருதி ஹரிஜனங்களுக்கு வழங்க முன்வருமா ?"

[20th December 1954

THE HON. SRI B. PARAMESWARAN :—" I shall have that suggestion examined."

SRI K. R. NALLASIVAM :—" May I know how many *cheris* have been taken up for investigation from Bhavani and Tiruppur taluks? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" I do not have the information on hand, Sir. If a separate question is put, I shall try to furnish the information."

11-40 a.m. SRI K. T. RAJU :—" கனம் சபாநாயகர் அவர்களே, ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு புதிதாக நிலம் கொடுக்கப்படவேண்டும் என்ற விஷயம் ஒரு புறம் இருந்தாலும், அதற்கு முந்தி ஏற்கெனவே ஹரிஜனங்கள் சர்க்கார்ப் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டிக்கொண்டிருந்தால் அவர்களை வெளியேற்றாமல் இருப்பதற்காவது உடனடியாக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Unless it is unauthorized occupation, the Government will see to it that they are not evicted."

SRI S. R. ARUMUGHAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொரு ஹரிஜனநல அதிகாரி இருக்கிறார். ஒவ்வொரு ஜில்லாவிலும் அந்தந்த அதிகாரி சேரிகளையெல்லாம் சுற்றிப் பார்த்து கணக்கெடுக்கும்போது, சில சேரிகள் தனி நபருக்குச் சொந்தமான நிலத்தில் இருக்கின்றன, சில சேரிகள் சர்க்கார் புறம்போக்கு நிலங்களிலும் இருக்கின்றன என்று தெரியவருகிறது. சர்க்கார்ப் புறம்போக்கு நிலங்களைப் பொறுத்தவரையில் ஹரிஜனநல அதிகாரி தாசில்தாருக்கு எழுதினால், தாசில்தாரிடமிருந்து ஒருவிதமான பதிலும் வருவதில்லை. இதுமாதிரி சிக்கல் எங்கள் ஜில்லாவில் இருக்கிறது. ஹரிஜனநல அதிகாரியைக் கேட்கும்போது தங்களிடம் தகவல் கிடையாது என்றும், ரெவினியூ இலாகாவினர் ஒத்துழைப்பதில்லையென்றும் சொல்கிறார்கள். இந்த ஒரு விஷயத்தில் ரெவினியூ இலாகா ஹரிஜனநல இலாகாவுடன் ஒத்துழைப்பதற்கான ஏற்பாட்டை சர்க்கார் செய்வார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Periodical reports are called for from the Board of Revenue. The Board of Revenue has been submitting reports every three months and we will ask it to submit its reports even earlier if possible. Apart from this fact, Revenue Department people are appointed as District Welfare Officers because, only they know how to work the Land Acquisition Act and they are really cooperating with the Harijan Welfare Department in its work If still, there are any proposals pending implementation, we will issue instructions to expedite them."

SRI K. R. NALLASIVAM :—" சபாநாயகர் அவர்களே, கிராமங்களிலுள்ள நத்தம் புறம்போக்கு நிலங்களில் பல ஹரிஜனங்கள் குடியிருக்கிறார்கள். அந்த நிலங்களை ஹரிஜனங்களுக்குப் பட்டா செய்து கொடுத்துவிட்டால் 'acquire' செய்யவேண்டிய அவசியம் குறைந்துவிடும். அவைகளை ஹரிஜனங்களுக்கு . . . . "

MR. SPEAKER :—" ஸ்ரீ K. T. ராஜு அவர்கள் கேட்ட கேள்வி மாதிரியே உங்களுடையது இருக்கிறதே."

SRI K. R. NALLASIVAM :—" நத்தம் புறம்போக்கு நிலங்களை ஹரிஜனங்களுக்கு பட்டா செய்துகொடுப்பதற்கான ஏற்பாட்டை சர்க்கார் செய்வார்களா ? "

20th December 1954]

THE HON. SRI B. PARAMESWARAN :—" This is a question relating to the Coimbatore district. However, every case will be decided on its merits."

SRI M. KALYANASUNDARAM :—" சபாநாயகர் அவர்களே, ஹரிஜன சேரிகள் பல தனிப்பட்டவாகளுக்குச் சொந்தமான நிலங்களில் இருக்கின்றன. அவர்கள் ஹரிஜனங்களை தங்கள் நிலங்களிலிருந்து வெளியேற்ற முயற்சிக்கிறார்கள். சர்க்கார் நிலமாக இருந்தாலும் சரி, தனிபபட்டவர்களுக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும் சரி, ஹரிஜனங்களை சேரிகளிலிருந்து வெளியேற்றக்கூடாது என்பதற்காக சென்னை நகரத்தில் உள்ளதைப் போன்ற ஒரு பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவர சர்க்கார் முயற்சி செய்வார்களா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" That is a general question. It may be raised at the time when discussion on the Budget takes place."

Perfunctory investigation of a murder case at Kottooli, Chevayur firka, Malabar.

* 455 *Q.*—SRI P. KUNHIRAMA KIDAV : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received any representations from the public of Kottooli village in Chevayur firka in Malabar, concerning a murder case and also about the neglect of the investigating officials in the matter; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) No, Sir.

" (*b*) Does not arise."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Are Government aware that one Gopalan, aged 23, was murdered in Chevayur firka, in Kottooli village, and that representations were made to the district authorities in this regard? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The main question is whether representation concerning a murder case was made. Such vague questions cannot be answered. If the hon. Member puts a specific question, it will be answered."

SRI M. NARAYANA KURUP :—" May I know whether representations made to the District Collector will be considered as representations made to the Government? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" No, Sir."

* SRI R. KRISHNAN :—" മലബാറിൽ ഇതുപോലെ വളരെയധികം കൊലക്കേസുകൾ തെളിവില്ലാതെ പോകുന്നതായി ഗവർമ്മെണ്ടിന്ന് ആവലാതി കിട്ടിക്കൊണ്ടിരിക്കയാണ്. പോലീസുകാരുടെ കാര്യക്ഷമതക്കുറവോ ഉപേക്ഷയോ ആണ് ഇതിന്നു കാരണം. അതുകൊണ്ട് പോലീസിന്റെ നടപടിയെക്കുറിച്ചും കേസന്വേഷണം കൂട കാര്യക്ഷമമാക്കുന്നതിനെക്കുറിച്ചും അന്വേഷണം നടത്താൻ ഒരു കമ്മിറ്റിയെ നിയമിക്കുമോ ?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" It may be translated, Sir."